நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 85 /2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(புகார்தாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 42 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 09–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**புகார்தாரர் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.06 PM.

1. நான் தெர்மலில் ஜே.சி.பி ஓட்நராக பணி புரிந்து வருகிறேன். அதை தவிர பகுதி நேரமாக ஓட்டுநராக வழக்கறிஞர் பிரபாகரன் உட்பட யார் கூப்பிட்டாலும் தற்காலிக ஓட்டுநராக பணிக்கு செல்வது வழக்கம். எனக்கு ஜேசிபி ஓட்டவும் மற்ற வாகனங்கள் ஓட்டவும் எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. இரண்டு விபத்து

வழக்குகளில் நேரில் பார்த்த சாட்சியாக இந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லியுள்ளேன். நான் சாட்சி சொன்ன இரண்டு வழக்குகளும் மேற்படி வழக்கறிஞர் பிரபாகரன் அவர்களின் உறவினர் சம்பந்தபட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் கோயமுத்தூர் காளப்பட்டி டான் என்ஜினியரிங் கம்பெனியில் வேலை செய்து வரும்போது பக்கத்து கம்பெனியில் எதிரி அருணன் வேலை செய்த வகையில் எனக்கு பழக்கம். எதிரி வேலை செய்த நிறுவனத்தின் பெயர் எனக்கு தெரியாது. எதிரி அந்த கம்பெனியில் என்ன வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கமாக அருகில் இருந்த கடைகளுக்கு டீ, டிபன் சாப்பிட வரும்போது எனக்கு பழக்கம்.

3. மேற்படி டான் என்ஜினியரிங் கம்பெனியில் சூப்பர் வைசராக 2017 முதல் 2024 வரை வேலை செய்தேன். மேற்படி டான் என்ஜினியரிங் நிறுவனத்தில் கார் சமபந்தபட்ட உதிரி பாகங்களை தயார் செய்கிறார்கள். மேற்படி கம்பெனியில் வேலை செய்ததற்கு அடையாள அட்டை, இஎஸ்ஐ, பிஎப் ஆகியவை வழங்கப்பட்டிருந்தது.

4. மேற்படி இஎஸ்ஐ, பிஎப்,ஆகியவற்றை சரண்டர் செய்து பணம் பெற்று கொண்டேன். மேற்படி ஆவணங்கள் தற்போது என்னிடம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. மேற்படி பணம் பெற்றது தொடர்பாக வங்கி கணக்கு அறிக்கை மற்றும் வருமானவரி அடையாள அட்டை ஆகியவற்றை என்னால் தாக்கல் செய்ய இயலும். எதிரியின் பூர்விக வீடு எனக்கு தெரியாது. எதிரியின் வீடு கோயமுத்தூர் கணபதியில் உள்ளது. நான் அவரது வீட்டிற்கு சென்றதில்லை. அவரது குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது.

5. கொரனா காலக்கட்டத்தில் எதிரி சுமார் 2 வருடங்களாக எனக்கு பழக்கம். அந்த கொரனா காலக்கட்டத்தில் தான் பணம் கொடுத்தீர்களா என்றால் இல்லை 2024ம் ஆண்டு பணம் கொடுத்தேன். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி யார் என்றே எனக்கு தெரியாது என்றாலும், சரியல்ல. எதிரி மீது ஒரு பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரியை பார்த்ததே

இல்லை என்றால் சரியல்ல. எதிரி ஓரளவுக்கு குண்டாக இருப்பார். எதிரி மாநிறமாக இருப்பார்.

6. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.28 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**